## வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர்

# மெட்ரோ ரயில் நீட்டிப்பு

### பணிகளை அமைச்சர் ஆய்வு



சென்னை, ஜன.9: வண்ணாரப்பேட்டை- திருவொற்றியூர் விம்கோ நகர் இடையிலான இறுதிகட்ட மெட்ரோ ரயில் நீட்டிப்பு பணிகளை அமைச்சர் எம்.சி.சம்பத் நேற்று ஆய்வு செய்தார்.

வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர்வரை 9.1கி.மீ தூரத்தில் மெட்ரோ ரயில் நீட்டிப்பு பணிகள் நடந்து வருகிறது. இவ்வழித்தடத்தில் 80 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், டீசல் ரயில் இன்ஜின் மூலம் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டுள்ளது. கடந்த டிசம்பர் மாதம் இவ்வழித்தில் நடந்து வரும் இறுதி கட்ட மெட்ரோ ரயில் பணிகளை மெட்ரோ ரயில் மேலாண்மை இயக்குநர் பிரதீப் யாதவ் ஆய்வு செய்தார். தொடர்ந்து, தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத் நேற்று வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான இறுதி கட்ட கட்டுமான பணிகளை பார்வையிட்டார்.

இதேபோல், 9 நிலையங்களில் நடந்து வரும் எஞ்சிய பணிகளை ஆய்வு செய்து அவற்றை விரைவில் முடிக்கும்படி அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார். அப்போது, சோதனை ஓட்டத்தில் இருந்த மெட்ரோ ரயிலில் உள்ள வசதிகளை பார்வையிட்டு சோதனை ஓட்டம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

அமைச்சரின் இந்த ஆய்வை தொடர்ந்து பொங்கல் பண்டிகைக்கு பிறகு இந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு நடத்த உள்ளார். பின்னார், இம்மாத இறுதிக்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ரயில் சேவை தொடங்கப்படும்.